Anglo Indian - Mar - 2007

**7451**

Register Number | | | | | |

# தமிழ்

நேரம் : இரண்டு மணி முப்பது நிமிடங்கள் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) வட்டு ஆ) மல்லல்

இ) கோட்டி ஈ) நனி

உ) வற்பம் ஊ) பங்கயம்

எ) பேதை ஏ) ஆருயிர்.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) நூல் + இன்றி ஆ) பல + மீன்.

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) அல்லலுற்று ஆ) எழுந்திருந்தார்.

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) அக்கறை

ஆ) விடாமுயற்சி

இ) ஆற்றல்.

5. எவையேனும் **இரண்டினைப்** பிழைத்திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) நீயும் நானும் வருவேன்.

ஆ) அவள் கொடுத்த பேனா இதுவல்ல.

இ) ஆடுகள் புல் தின்றது.

6. வினைப் பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) கொண்டனர் ஆ) செய்தான்.

7. தொழிற்பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) உணர் ஆ) கருது.

8. மீனா வீடு கட்டினாள்.

( செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. கண்ணன் படிப்பான்.

( வினா வாக்கியமாக மாற்றுக ) 2

10. அவன் படித்தான்.

( எதிர்மறை வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

11. அவள் படித்தாள்; பட்டம் பெற்றாள்; வாழ்வில் உயர்ந்தாள்.

( எதிர்கால வாக்கியமாக மாற்றுக ) 2

12. அழுதாள்; புலம்பினாள்; எழுந்தாள்;

புறப்பட்டாள் மன்னன் அவைநோக்கி.

( ஒரே வாக்கியமாக மாற்றுக ) 2

13. எவையேனும் இரண்டனுக்கு உறுப்பிலக்கணம் தருக : $2 \times 1 = 2$

அ) வந்தார் ஆ) சொன்னாள்

இ) பாய்ந்தன ஈ) நீக்கிய.

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக : 3

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்(து)

அகநக நட்பது நட்பு.

15. எவையேனும் நான்கு சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருக : $4 \times 1 = 4$

அ) நுழைபுலம் ஆ) நெடுநீர்

இ) வளையாத ஈ) மந்திரிமார் சாத்திரிமார்

உ) உரைத்தார் ஊ) மின்னல்.

16. எவையேனும் ஆறு இலக்கண வினாக்களுக்கு விடையளி : $6 \times 2 = 12$

அ) குற்றியலுகரம் என்றால் என்ன ?

ஆ) பெயர்ச்சொல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

இ) உயர்திணைக்குரிய பால்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

ஈ) காலம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

உ) தொகைநிலைத் தொடரின் வகைகளை குறிப்பிடுக.

ஊ) பகுபதம் என்றால் என்ன ? அதன் உறுப்புகள் யாவை ?

எ) ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்துக.

ஏ) இல்பொருள் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

17. அடிபிறழாமல் எழுதுக :

அ) ''பூத்தாலும்'' எனத் தொடங்கும் பழமொழி பாடல் 4

18. எவையேனும் இரண்டு செய்யுட்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : $2 \times 2 = 4$

அ) சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்ற டைக்குதே - மழை
தேடி யொரு கோடி வானம்
பாடி ஆடுதே.

ஆ) சீராரும் தெய்வத் திருவருளாம் பூமிமுதல்
பாராதி ஆண்ட பதியே பராபரமே.

இ) நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

19. பாடலின் பொருள் தெளிந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளி : 4

" 'அன்புதான் கடவுள்' என்றே
அனுதினம் உணர்த்தி வந்தார்
'அன்புதான் பகைமைத் தீயை
அணைத்திடும் வெள்ளம்' என்றார்
'அன்புதான் உள்ளத் துள்ள
அழுக்கெலாம் களையும்' என்றார்
'அன்புதான் அகிம்சைப் போரின்
ஆயுதம்' என்றும் சொன்னார். "

அ) அகிம்சைப் போரின் ஆயுதம் எது ?

ஆ) எது உள்ளத்து உள்ள அழுக்கை அகற்றும் ?

இ) யாருக்கு அன்பு ஆயுதமாகப் பயன்பட்டது ?

ஈ) இப்பாடலைப் பாடிய கவிஞர் யார் ?

20. ஏதேனும் ஒன்றினை இடஞ்சுட்டி விளக்குக : 3

அ) 'அலகு இல் மூன்றினுள் நடுவ மைந்தனை'

1. பாடல் பகுதி யாது ?
2. பாடலின் ஆசிரியர் யார் ?
3. மூன்றினுள் - மூவர் யார் ?

ஆ) 'குழந்தைகளைக் கூலிவேலைகளில் ஈடுபடுத்துவது
நாட்டின் கேவலத்திற்கு அடையாளம்'

1. யார் கூறிய உரை ?

21. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : $6 \times 2 = 12$

அ) உண்மையான அழகுடையவர் என்று எவரைச் சொல்லலாம் ?

ஆ) எது தோடர்களின் செல்வமாகக் கருதப்படுகிறது ?

இ) அதர்மம் செய்பவனின் நிலை என்னவென்று வள்ளுவர் குறிப்பிடுகிறார் ?

ஈ) அலுவலகங்களில் கணிப்பொறியின் பயன்பாடு யாது ?

உ) தேசியம் எதன் அடிப்படையில் அமைய வேண்டும் ?

ஊ) நல்ல நாடு அமைய ஔவை கூறும் கருத்து யாது ?

எ) கோடை விடுமுறையை எவ்வாறு கழிக்க வேண்டும் என்று நெ. து. சு. கூறுகிறார் ?

ஏ) மாடு மனிதனுக்கு எங்ஙனம் பயன்படுகிறது ?

22. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி : 7

அ) 'பிள்ளைகள் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' - விளக்குக.

ஆ) மனவலிமை பற்றி மு. வ. கூறும் கருத்துக்களைத் தொகுக்க.

இ) கணிப்பொறியின் இன்றியமையாமை பற்றி பேராசிரியர். மதியழகன் எவ்வாறு விளக்குகிறார் ?

23. ஏதேனும் ஒரு தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) முயற்சி திருவினையாக்கும்.

ஆ) பெண் கல்வி.

இ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

24. ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் நும் பெயர், பதிவெண், சொந்த முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) நீ ரசித்த ஓவியக் கண்காட்சி பற்றி நண்பனுக்குக் கடிதம்.

ஆ) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கிடையே நடந்த நாடகப் போட்டி முடிவு பற்றி பத்திரிகை ஆசிரியருக்குச் செய்தி எழுதுக.

இ) உன் தெருவில் குப்பைகள் அகற்றப்படாமல் இருப்பதை அறிவித்து, மாநகராட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

25. கீழ்க்கண்ட பகுதிகளுக்கு மொழியாக்கம் தருக : 4

அ) All that glitters is not gold.

ஆ) Make hay when the sun shines.

இ) Many unbelievable things happen in the animal world. Many animals in the cold countries sleep for months and months together during winter. This winter sleep is called Hybernation.